**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 1, November 2025** **E-ISSN: 2583-0481**

# An Ethnographic Perspective and Historical Traces of the Kani Tribal Community in Kanyakumari

**G. Aswathypooja**, Tamil Research Scholar, Reg. No.: 22213154022020,
S. T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-9474-5410**
**Dr. N. Nisha Navis,** Assistant Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil,
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597**
**DOI: 10.5281/zenodo.18866269**
**Received:** 29 August 2025, **Revised:** 22 September 2025, **Accepted:** 7 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*The remnants of primitive man's life can be found in an ethnic group. The people who did not have a stable life on land became nomadic people and settled in the Western Ghats. In the eyes of Mother Nature, the life of the Kani tribal people of the land is clear. They are seen in the forests found in Kumari. The life living with nature reflects the core life of the Kani people. Their dressing style is amazing and show their heritage and culture. Their family structure makes the heritage interesting. The primitive man saw that social thought has causality. The responsibilities and positions in society highlight how their lives are structured. It can be seen that the language becomes the identity of the people of the land. The foreign language found in spoken language and in song creates a mixed displacement. Also, it seems that the food tradition of the Kani people is a remnant found in the people of the Sangam period. The way of agriculture, the relationship with nature and land-based festivals are important to them as the life of the land is centred around the land. Also, the land-based life of the Kani people is seen in the transmission of their traditions and social values to the next generation. Their art, dance, archery, food gathering and hunting techniques are seen as a way to protect future generations from extinction. Farmers are well aware of the vegetation in the forest and have a unique traditional knowledge of the biological resources around them. The oral stories convey their heritage, uniqueness and antiquity of the Kani people. Hence, the historical traces of the farmers in the form of ethnography have been studied in this article.*

**Keywords**: Ethnography, Perspective, Historical Traces, Kaani Tribes, Kanyakumari.

## References

[1] Agathiyalingam, S. *Tamilaga Pazhangudigal*. p. 20.
[2] Aiyyappan Kani. Informant. Andippotrai. Age 58.
[3] Kilammi Jeni Priya, Jo. *Malarum Sarugum Navalil Nadar Ina Makkalin Ina Varaiviyal*. Research Article. p. 18.
[4] Kumar Kani. Informant. Thachamalai. Age 45.
[5] Kochumani. Song Contributor. *Tamilaga Kanikkarargalin Nattuppura Paadalgal*.
[6] Chidambaranatha Pillai, V. *Kanikkarargalin Mozhi Mempattu Sindhanaigal*. Research Article.
[7] ---. *Tamilaga Kanikkara Pazhangudiyinarin Nattuppura Paadalgal*. Tamil University, Thanjavur.
[8] Subramaniyam, V. I., and Mathur. *National Seminar Tribal Education Kerala*.
[9] Celine, Sa. *Kani Makkalin Vazhakku Sorkal*. Thesis. Department of Tamil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, April 2009. p. 2.

[10] Sornapabila, Ira. *Kurinji Nila Panpadum Maatrangalum*. Thesis.
[11] Dharmaraj, Yo. *Kanikkara Pazhangudiyinarin Vazhakkatrial*. Vol. 1.
[12] Naseemudeen, P. *Idukki Maavatta Pazhangudi Makkalin Vazhakkatrial*. p. 9.
[13] Bhaktavatsala Bharathi. *Ilakkiya Manudaviyal*. Adaiyalam Pathippagam, 2014.
[14] ---. *Tamilaga Pazhangudigal*. p. 48.
[15] Parvathi. Informant. Thachamalai. Age 65.
[16] Perumal, A. Ka. *Kumari Nattuppuraviyal*. Thannanaane Pathippagam.
[17] Manimaran, K. *Pazhangudi Makkalin Vazhviya Kanyakumari Maavattam*. Junior Doctoral Thesis, Tamil Kalai Aayvagam.
[18] Robert Firesheet. *The Social Order*. Vol. 3, 1970.
[19] Lathika. Informant. Koruvakuzhi. Age 40.
[20] Vijayamma. Informant. Koruvakuzhi. Age 60.
[21] Verrier Elwin. *Elwin Kanda Pazhangudigal*. p. 120.
[22] Vaiyapuri Pillai, S. *Sanga Ilakkiyam*. Paari Nilayam, Chennai.
[23] Stephen, Gna. *Ilakkiya Ina Varaiviyal*. New Century Book House, Chennai.
[24] Hilary Helsen. *Early British Anthropology*. Thavijoth Pathippagam, London.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இனவரைவியல் நோக்கில் குமரி வாழ் பழங்குடிக் காணி இன மக்களின் வரலாற்றுச் சுவடுகள்

**கௌ. அஸ்வதிபூஜா,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 22213154022020, தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-9474-5410
**முனைவர் நே. நிஷாநேவிஸ்,** உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597
**DOI: 10.5281/zenodo.18866269**

**ஆய்வுச் சுருக்கம்**

*ஆதிகால மனிதன் விட்டுச்சென்ற வாழ்வியல் எச்சங்கள் இன்றளவும் இனக்குழு மக்களிடம் காணப்படுகிறது. ஒரு காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் நாளடைவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு சொந்தமானார்கள். இயற்கை அன்னையின் எழிலில் கள்ளம் கபடமற்ற காணி மக்களின் வாழ்வியல் விளங்குகிறது. தனித்துவமான குமரியில் காணப்படும் காடுகளில் இவர்களின் கால் சுவடுகள் பதிந்துள்ளது. இயற்கை உடனான வாழ்வியல் காணி மக்களின் உருவ அமைப்பை பிரதிபலிக்கிறது. உடையும்,உறையுள்ளும் இவர்களின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் பார்த்து பிரமிக்க வைக்கிறது. குடும்ப அமைப்பு அதில் காணப்படும் பிரிவுகளும் மிகவும் சுவாரசியமாகிறது. ஆதிகால மனிதன் சமூக சிந்தனைகள் காரண காரியங்களைக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. சமூகத்தின் பொறுப்புகள் மற்றும் பதவிகள் அவர்களின் வாழ்க்கை கட்டுக்கோப்பாக இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. மொழி காணியின மக்களின் அடையாளமாக மாறுவதை காண முடிகிறது. பேச்சு வழக்கிலும், பாடலிலும் காணப்படும் வேற்று மொழிக் கலப்பு இடப்பெயர்வை சுட்டுகிறது. மேலும், காணி மக்களின் உணவு பாரம்பரியம் சங்க கால மக்களிடம் காணப்பட்ட எச்சங்களாகும் என்பது தெரிகிறது. காணியின மக்களின் வாழ்க்கை நிலத்தை மையமாகக் கொண்டு வாழ்வதனால் விவசாயம், இயற்கை உடனான உறவு, நிலம் சார்ந்த பண்டிகைகள் இவர்களிடம் முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும், காணி மக்களின் நிலம் சார்ந்த வாழ்வியல் ஆனது அவர்களின் மரபுகள் மற்றும் சமூக விழுமியங்களை அடுத்தத் தலைமுறைக்குக் கடத்தப்படுவதையும் காணமுடிகிறது. இவர்களின் கலை, நடனம், வில்வித்தை, உணவு சேகரிப்பு மற்றும் உணவு வேட்டைக்கு கையாளும் உத்திகள் எதிர்கால தலைமுறையினரை அழிவிலிருந்து காத்துக் கொள்வதற்கான ஒரு வழியாக கருதுகின்றனர். காணிக்காரர்கள் காடுகளில் உள்ள தாவரங்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். வளங்களை பயன்படுத்துவது மற்றும் அவர்களை சுற்றியுள்ள உயிரியல் வளங்களை பற்றிய மிக தனித்துவமான பாரம்பரிய அறிவு இவ்வின மக்களிடம் காணப்படுகிறது. வாய்மொழி கதைகள் அம்மக்களின் தோற்ற மரபையும், தனித்துவத்தையும், பழமையையும் உணர்த்துகிறது. இனவரைவியல் பாங்கில் காணிக்காரர்களின் வரலாற்றுச் சுவடுகளை இவ்வாய்வு கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** இனவரைவியல், கண்ணோட்டம், வரலாற்றுச் சுவடுகள் , காணி பழங்குடியினர், கன்னியாகுமரி.

**முன்னுரை**

மனிதன் தோன்றியக் காலம் கணக்கிடுதல் அரிது. ஆனால், அவன் வாழ்ந்த வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் இவையாவும் ஆராயப்பட்டுள்ளன. ஒவ்வொரு இனக்குழு மக்களும் ஆதிகாலம் முதல் இன்று வரை அவ்வினத்தின் பாரம்பரியத்தையும், மரபினையும் விட்டுச் சென்றுள்ளனர் என்பதே உண்மை. பழங்குடி மக்களின் பண்பைப் பின்பற்றி வாழுகின்ற இனக்குழுக்கள் தமிழக மலைகளிலும், காடுகளிலும் பரவிக் காணப்படுகின்றனர். ஆரம்பகாலத்தில் காடே உலகம் என்று வாழ்ந்தப் பழங்குடியினர் தம் தேவைகளுக்காகப் பல கண்டுபிடிப்புகளைக் கொண்டு வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பூர்வக்குடி மக்களின் வரிசையில் வாழும் காணியின மக்களின் வாழ்வியல் எச்சங்களும், வரலாற்றுக் கூறுகளும் இன்றளவும் பேசப்படுகிறது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஆதி பழங்குடி காணிக்காரர்களின் பண்பாடும், கலாச்சாரமும் சமூகத்தில் இனக்குழு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள வழிவகை செய்கிறது. குமரி வாழ் காணிக்காரர்களின் வரலாற்றுச் சுவடுகள் இனக்குழு மக்களின் வாழ்வியல் கூறுகளை ஆராயும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**பழங்குடிகள்**

பழங்குடிகள் என்போர் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் நீண்ட காலமாக தங்களுக்கென தனிக் கலாச்சாரம், மொழி, வாழ்க்கை முறையைக் கொண்டும், இயற்கையின் மடியில் வாழ்கின்ற மக்களே பழங்குடிகள் ஆவர். ஆங்கிலத்தில் பழங்குடிகள் என்னும் சொல்லை ‘டிரைப்ஸ்’ (Tribes) என்பர். வெரியர் எல்வின் போன்ற மானுடவியலாளர் (Tribes) என்பதற்கு “நாகரீகத்தில் பின் தங்கியவர்கள்” என்று பொருள் கூறுகின்றனர். (ப.120) எல்வின் கண்ட பழங்குடிகள் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மந்திரம், ஆவி, இயற்கை இவற்றில் நம்பிக்கையும் இயற்கையில் அச்சமும் கொண்டு பழமையான பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கும் மக்களே பழங்குடிகள் ஆவார். “Tribes என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக 'பழங்குடி' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இனக்குழு மக்கள் என்றும், மலைவாழ் மக்கள் என்றும் வேறு மொழிப்பெயர்ப்புகள் தமிழறிஞர்களால் கூறப்படுகின்றன”. (ப.9) என்று டாக்டர்.பீ.நசீம்தீன் குறிப்பிடுகின்றார்.

**தமிழகத்தின் பழங்குடிகள்**

36 வகை பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவை, “1. அடியேன், 2. அரனடன், 3. ஏரவல்லன், 4. இருளர். 5. கதர், 6. கம்மாரா, 7. காணிக்காரன், 8. கணியன், 9. காட்டுநாயக்கன், 10. கொச்சுவேலன், 11. கொண்டாகபஸ், 12. கோண்டாரெட்டி, 13. கோரகா, 14. கோட்டா, 15. குடியா, 16. குறிச்சன், 17. குரும்பா, 18. குருமன்ஸ், 19. மகாமலசர், 20. மலையரையன், 21. மலைப் பண்டாரம், 22. மலைவேடன், 23. மலைக்குரவன், 24. மலாசர், 25. மலையாளி, 26. மன்னன, 27. முதுகர், 28. முத்துவன், 29. பல்லேயன், 30. பள்ளியன், 31. பள்ளியார், 32. பணியன், 33. சோகைர், 34. தோடா, 35. உரலி, 36. நரிக்குறவன், குருவிக்காரன் இத்தகைய பழங்குடியினங்கள் நாகரிகத்தில் பின்தங்கிய பழங்குடியின மக்கள் ஆவர். இவர்கள் தமிழக மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்றனர். “தமிழகத்தில் 23 பழகுடியினர் வாழ்ந்ததாக 1961 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் கூறப்படுகிறது” (பக்.102) என்று ச.அகத்தியலிங்கம் தமிழகப் பழங்குடிகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**குமரிவாழ் பழங்குடி மக்கள்**

குமரி பழங்குடி மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழ்கின்றனர். இவர்களில் காணி பழங்குடியினர் முக்கியமானவர்கள். இயற்கை வளங்களைச் சார்ந்த வாழ்வாதாரங்களைக் கொண்டு வாழ்கின்றனர். குமரி மாவட்டத்தில் சுருளக்கோடு, பேச்சுப்பாறை, பொன்மனை போன்ற ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு உட்பட்ட வெள்ளாம்பி மலை முதல் சிறுகடத்து காணிமலை வரையிலான மேற்குத் தொடர்ச்சி

மலைகளில் வாழுகின்றனர். "காணிக்காரர்கள் குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை, பேசிப்பாறை, கோதையார் ஆகிய காட்டுப்பகுதிகளிலும், கேரளத்தின் தென்கோடியில் உள்ள நெய்யாற்றங்கரை காடுகளிலும் வாழ்கின்றனர்". (பக்.12) என்று ச.அகத்தியலிங்கம் தமிழக பழங்குடிகள் என்ற நூலில் குமரி மாவட்டப் பழங்குடி மக்களை பற்றி குறிப்பிட்டுள்ளார். மேலும், குமரி மாவட்டத்தில் அண்மை காலங்களில் நரிக்குறவர், குருவிக்காரன் என்ற இன மக்களை பழங்குடி பட்டியலில் சேர்த்துள்ளனர். இந்த நரிக்குறவர்கள் இன மக்கள் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியில் அதிகமானோர் வசித்து வருகின்றனர்." இந்தியாவில் பிறமொழி பேசும் அயல் மாநிலங்களிலிருந்து இங்கு வந்து குடியேறி வாழும் நரிக்குறவர்களும் (குருவிக்காரன்) குறவர் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர்". (பக்.2) என்ற குறிப்பினை ச.அகத்தியலிங்கம் தமிழக பழங்குடிகள் நூலில் கூறியுள்ளார். இதிலிருந்து குருவிக்காரர்கள் என்ற இன மக்கள் இந்தியாவில் வந்தேறியவர்கள் என்பதை அறிய முடிகிறது. இவர்களின் மொழியும் வடமொழி குடும்பத்தைச் சேர்ந்ததாக காணப்படுகிறது.

**குமரி மாவட்ட காணி கிராமங்கள்**

கல்குளம் வட்டத்தில் காணி இன மக்கள் வசித்து வருகின்றனர். அதில் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட மலை கிராமங்கள் 42 உள்ளன. "1. கல்லார், 2. தோட்டமலை, 3. அப்பர் கோதையார், 4. வளையம்தூக்கி, 5. வெட்டாம்விளை, 6. வலியமலை, 7.விளாமலை, 8. ஆலம்பாறை, 9. அஞ்சுகண்டறை, 10. கேம்புரோடு, 11. கடம்பன்மூடு, 12. களப்பாறை, 13. கண்ணன்குழி, 14. காயல்ரோடு, 15. மாறாமலை, 16. மணலிக்காடு. 17. ஜெயநகர், 18. முகளியடி, 19. படுபாறை, 20. பொன்னியாகுளம், 21. தோணிக்குழி, 22. வேப்பமூட்டுவிளை, 23. சிலங்குன்று, 24. தாணிக் குண்டு, 25. அன்புநகர், 26. ஆண்டிப்பொற்றை, 27. துறநல்லூர், 28. எட்டாம்குன்று, 29. காந்திநகர், 30. பேச்சுப்பாறை, 31. காக்கச்சல், 32. கிள்ளி கோணம், 33. கொடுந்துறை, 34. கோருவக்குழி, 35.குற்றியார், 36. லோயர் கோதையார், 37. மாங்காமலை, 38. மணியங்குழி, 39. மிஞ்சிலா மடக்கு, 40. மோதிரம் மலை, 41. முடவன் பொற்றை, 42. தச்சமலை". இந்த இடங்களில் காணிஇனமக்கள் வாழ்கின்றனர்.

**காணிக்காரர்கள் பூர்வீகம்**

பழங்குடி இன மக்களின் வரிசையில் 'காணிக்காரன்' என்ற இன மக்கள் வாழுகின்றனர். இவ்வின மக்கள் பெரும்பாலும் காடுகளில் வாழ்கின்றனர். "தமிழில் 'காணி' என்றால் நில அளவை குறிக்கும். அதனால்தான் காணிக்காரன் என்பதற்கு நிலத்திற்கு உரிமையாளன் என்று கூறுகின்றனர்". (பக்.37) யோ. தர்மராஜ் .காணிக்காரர்கள் குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை, பேச்சிப்பாறை, கோதையார் ஆகிய மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வசித்து வருகின்றனர். காணிக்கார்களின் பூர்வீகமானது "காணிக்காரர் திருநெல்வேலியில் இருந்து வந்த ஒரு குழுவினர் என இவர்களது வாய்மொழி வரலாறு கூறுகிறது". (பக்.20) என்ற செய்தியை டாக்டர் பீ. நசீம்தீன் அவர்கள் இடுக்கி மாவட்ட பழங்குடி மக்களின் வழக்காற்றியல் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதைப் போன்றே காணிக்காரார்களின் சுவடுகள் "தென் திருவிதாங்கூர் மலைப்பகுதியில் வாழ்ந்த வரும் காணிக்காரப் பழங்குடியின் முன்னோர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, கல்லிடைக்குறிச்சி ஆகிய பகுதிகளில் குறுநில மன்னர்களாக இருந்தனர். பாண்டியனிடம் தோல்வி அடைந்து எஞ்சியோர் திருவிதாங்கூர் பகுதிக்கு வந்தன் சேர்ந்தனர்" (பக்.48) என்று தமிழக பழங்குடிகள் என்ற நூலில் பக்தவத்சல பாரதி குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் காணி மக்களின் பூர்வீகமானது திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் காணிக்காரர்கள் வரை பரவி உள்ளதை அறிய முடிகிறது.

**காணிக்காரர் தோற்ற மரபு**

ஒவ்வொரு இன மக்களுக்கும் அவளுடைய இனத்தைப் பற்றிய தோற்றம் குறித்த செவிவழி வரலாறு காணப்படும். அவ்வகையில் பூர்வகுடி காணி மக்களிடையே வாய்மொழி

வரலாறுகள் காணப்படுகிறது. அதாவது "ஒரு மலையில் தெய்வத்தால் படைக்கப்பட்ட தம்பதியினருக்கு ஏழு ஆண் குழந்தைகள் பிறந்ததாகவும், அதேபோன்று மலை தெய்வத்தால் படைக்கப்பட்ட மற்றொரு தம்பதியினருக்கு ஏழு பெண் குழந்தைகள் பிறந்தது. பெண் குழந்தையின் பெற்றோர் புலி கூட்டத்தால் கொல்லப்பட்டு காலச் சூழல் காரணமாக அந்த ஏழு பெண்களை அண்ணன், தம்பி ஏழு பேருடன் கூடி வாழ்ந்தனர் என்றும் இவர்களுக்கு பிறந்த குழந்தைகளேக் 'காணிக்காரர்கள்' என்று காணி மக்களின் வழக்குச் சொற்கள் என்ற ஆய்வேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்.2) சா.செலின்.

**மேற்குத் தொடர்ச்சி மலையும் காணிக்குடிகளும்**

கன்னியாகுமரியில் மேற்குத் தொடர்ச்சி மலையை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பூர்வகுடி காணி மக்களே பேசிப்பாறை ஊரின் சிறப்புக்குரியவர்கள். பேச்சிப்பாறை மலையின் மறுபுறம் காணப்படும் மலைகள் காணி மக்களின் வாழ்விடங்கள் ஆகிறது. இவர்களின் இயற்கை சூழலையும், பண்பாட்டையும் என் பாணியில் வெளிப்படுத்துவதில் இம்மக்களின் பங்கு அதிகம். "களப்பணியில் தகவலாளிகள் கூறும் தரவுகள் இனவரைவியலுக்கு அடிப்படையாக அமைகிறது. அதுபோல செவ்வியல் பனுவல்களில் பனுவல்களே தகவலாளிகளாக அமைய முடியும். பனுவல்களில் இடம்பெறும் கூற்றுக்கள் எடுத்துரைப்பியல் பணி போன்ற பல உத்திகள் தகவலாளிகளாக மாறுகின்றன". (பக்.23) பக்தவத்சலபாரதி.இவ்வாறு காணியின மக்களின் மலை சார்ந்த வாழ்வியல் அவர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பறைசாற்றுகிறது. காட்டில் உள்ள வன விலங்குகளிடமிருந்து தங்களை காத்தும், தினம் வாழ்க்கைப் போராட்டத்தை துணியுடன் வாழும் இம்மக்களின் பலமும், திறமையும் பிரமிக்க வைக்கிறது. காட்டில் வாழவும், தேவையான உணவை உற்பத்தி செய்வதற்கும் சிறந்த வேலைப்பாடுகளையும், உத்திகளையும் தெரிந்து வைத்துள்ளனர்.

**காணிக்காரர்கள் பெயர் காரணம்**

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஜீவராசிகளான காணியின மக்களை"தென் திருவிதாங்கூரை ஆண்ட மார்த்தாண்ட வர்மா ஆட்சிக்கு முன் காணிக்காரர்கள் அரையன்மார் என்றும் வேலான்மார் என்றும் அழைக்கப்பட்டதாக கூறுவர்" (பக்.13) கே. மணிமாறன். காணிக்காரர்கள் அரச பரம்பரையில் வந்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். இதற்குச் சான்றாக, "மன்னானுக்கு கீழ் பணியாற்றும் ஒன்பது குடித்தலைவர்களுக்கும் (காணிகள்) சங்கு முத்திரை பதித்த வெள்ளிப் பூண்ட பிரம்பு கொடுக்கப்பட்டது". (பக்.38) டா.பீ.நசீம்தீன். இச்செய்தியின் மூலம் அக்காலத்தில் பழங்குடி மக்களான காணியின மக்கள் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர் என்பதை அறிய முடிகிறது. "காணிக்காரர்களுக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆண்ட அப்போதைய மன்னன் மார்த்தாண்ட வர்மா போர் காலங்களில் காட்டுக்குள் தஞ்சம் புகுந்தாரென்றும் அப்போது அங்கு வாழும் காணியின மக்கள் அடைக்கலம் கொடுத்து மன்னருக்கு சேவகம் புரிந்ததாக இன்றளவும் பேச்சிப்பாறை மலை கிராமங்களில் வசிக்கும் காணி மக்கள் கூறுகின்றனர்". (தகவலாளி-பார்வதி, வயது-68 தச்சமலை). வாய்மொழியாக கூறப்படும் இக்கதையின் உண்மை தன்மையை ச.அகத்தியலிங்கம் தமிழக பழங்குடிகள் மக்கள் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். அதாவது, "அத்திங்கள் மன்னனும் பாண்டியர்களும் ஒன்று கூடி வீர மார்த்தாண்டன் மேல் போர் தொடுத்தனர். இறுதியில் வீரமார்த்தாண்டன் தோற்கடிக்கப்பட்டான். தோற்கடிக்கப்பட்ட காணிகாரர்கள் செழிப்பு வாய்ந்த அடர்ந்து காடுகளில் மறைந்து வாழலாயினர்" (பக்.107) இவர்கள்தான் இன்னும் பேச்சிப் பாறை காடுகளில் வாழ்கின்ற காணிகாரர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை திருவிதாங்கூர் மன்னன் மலைவாழ் பழங்குடி இனத்தவர்களுக்கு இடம் பட்டா கொடுத்ததைப் பற்றிய சாற்றுப் பாடல்களில் காண முடிகிறது.

**கேரள ராசா பட்டயம் தந்தாரே**

**நாங்க சீராய் வாழவே**
**நாங்க ஆதி மலேவாசி**
**கானக சோலை மத்தியிலே**
**களிப்புடன் வாழும் மலைவாசி**
**நாங்க மலைச்சாராவுட மக்களான**
**மலையில ஜீவிக்கின மலைவாசி (பாடல் தந்தவர் கொச்சு மணி காணி)**

இப்பாடல் வரிகளில் இருந்து கேரள மன்னன் மலை வாசிகளான ஆதிப் பழங்குடி காணி மக்களுக்கு பட்டயம் கொடுத்த செய்தியினை அறிய முடிகிறது. மேலும் காண இன மக்கள் தங்களின் பெயருக்கு பின் 'காணி' என்ற அடைமொழியை பயன்படுத்துகின்றனர். சான்றாக, ஸ்ரீரங்கன் காணி, கிருஷ்ணன் காணி என்றும் பெண்களின் பெயருக்கு பின் இவ்வடைமொழி சேர்க்கப்படுவதில்லை. “பரப்பன்காணி- பரந்த முகமுடையவன், சந்திரன் காணி-மதி, மார்த்தாண்டன் காணி-சூரியன், முண்டன் காணி-உடல் குறையுடையவன்” (பக்.15) ச.அகத்தியலிங்கம். இத்தகைய காரணப் பெயர்களும் காணி மக்களிடம் காணப்படுகிறது.

**உருவ அமைப்பு**

காணிக்காரர்கள் பொதுவாக காடுகளில் வாழும் தன்மை கொண்டவர்கள். ஆரம்ப காலகட்டங்களில் பழங்குடியினர்கள் கருமை நிறம் கொண்டும் குள்ளமான தோற்றத்துடன் காணப்பட்டனர். நெற்றி அகலமாகவும், மூக்கு பரந்தும், சுருண்ட முடியும் கொண்டு காணப்படுகின்றனர். “காணி மக்களின் சராசரி உயரம் 152.8 செ.மீ, தலையோட்ட அளவு 74.2, மூக்களவு 89.6 என்று (பக். 165) எல்.ஏ கிருஷ்ணய்யர் குறிப்பிட்டுள்ளார். “எல்லா உயிரினங்களும் தாம் வாழும் புவியியற்ச்சூழலுக்கு ஏற்ப உடலமைப்புகளைக் கொண்டுள்ளன. மனிதர்கள் தம் வாழும் சூழலின் தட்பவெப்ப நிலைக்கேற்பவும் புவியியலமைப்புக்கு ஏற்பவும் உடலமைப்பு நிறம், செயல்பாடுகள் ஆகியவற்றை கொண்டுள்ளனர்.” (ராபர்ட், பக்.73) காணியின மக்கள் காடுகளில் வசிப்பதால் அங்கு உணவுக்காக அதிக நேரங்கள் நடப்பதாலும் வன விலங்குகளுக்கு அஞ்சி புதர்களிலும், மரக்குகைகளிலும் ஒளிந்து கொள்வதாலும் உடல் அமைப்புகளில் மாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் தற்போது காணிக்காரர்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றனர். நாகரீகத்தின் பின்தங்கிய இவர்கள் நாட்டு மக்கள் தொடர்பு ஏற்பட்ட பின் சாதாரண மனிதர்கள் போல காணப்படுகின்றனர்.

**ஆடை பாரம்பரியம்**

ஓரினத்தின் பண்பாடும், பாரம்பரியமும் அவர்களின் ஆடையில் காணப்படும்.நாகரிகம் வளரும் முன்பு பழங்குடி மக்களின் ஆடைகளில் முக்கியமானதாக தழையாடை காணப்படுகிறது.தழையாடைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

**மரங்கொல் கானவன்**
**புனந்துளர்ந்து வித்திய**
**பிறங்குகுரல் இறடி காக்கும்**
**புறந்தாழ்**
**அஞ்சிலோதி அசையியற்**
**கொடிச்சி**
**திருந்திழை அல்குற்குப்**
**பெருந்தழை உதவிச்**
**செயலை முழு முதல் ஒழிய (குறுந்தொகை, பா. 214 - 222)**

தங்களின் உடலை மறைப்பதற்கு மரப்பட்டை, தாவரங்களின் இலை போன்றவற்றையே பழங்குடி மக்கள் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். “1960-களில் பேச்சிப்பாறை மலை பகுதியில் வாழ்ந்த காணிக்காரர்கள் ஆண்கள் இடுப்பில் வேட்டியும், மேலாடை தூண்டு போட்டும், பெண்கள் மேலாடை அணியாமல் இடுப்பில் வேட்டி கட்டி

வாழ்ந்ததாக தச்ச மலைப் பகுதி காணியின மக்கள் கூறுகின்றனர்" பின்பு வெளியுலகமனிதர்களிடம் தொடர்பு கொண்ட பின்பு நாகரிகமான உடை அணிய தொடங்கியுள்ளனர். இதை போன்று இடுக்கி மாவட்டத்தில் வாழ்ந்த மன்னான் இன பழங்குடிகள் ஆரம்ப காலகட்டத்தில் காடுகளில் "அக்கால இரவு நேரங்களில் பொது இடத்தில் தீ மூட்டி ஆணும், பெண்ணும் நிர்வாணமாக அமர்ந்து குளிர் காய்வர். என்றும் இலையாடைக்கு 'வட்டக்கண்ணி' என்னும் மரத்தின் அகலமான மெல்லிய இலைகளை பயன்படுத்துவார்களாம்." (பக். 43) என்று பழங்குடி மக்களின் ஆடை பற்றிய குறிப்புகளை டாக்டர். பீ. நசீம்தீன் குறிப்பிட்டுள்ளார்.

**காணி மக்களின் குடியிருப்புகள்**

காணிக்காரர்களின் குடியிருப்பு மலைகளிலும், பாறைகளின் மேலும், மரத்தில் மாடங்கள் அமைத்தும், மலைச்சரிவுகளிலும் இம்மக்கள் வசிக்கின்றனர். ஆரம்பகாலத்தில் பழங்குடி காணிகள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துள்ளனர். தற்போது ஒரு வீட்டிற்கு மற்றொரு வீட்டிற்குமான இடைவெளி அதிகமாக காணப்படுகிறது.காணி மக்கள் வசிக்கும் குடியிருப்புகளை "காணிக்குடி", "காணி பத்து" என்று அழைக்கின்றனர். (ச. அகத்தியலிங்கம், பக்.103)

**வீடுகளின் அமைப்புகள்**

காணி இன மக்கள் காடுகளில் வாழ்கின்றனர். ஆதலால் காட்டில் வாழும் வனவிலங்குகள் அவர்களை தாக்காத வண்ணம் வீடுகளை கட்டுகின்றனர். பெரும்பாலும் இவ்வின மக்களின் வீடுகள் மூங்கிலாலும், புல்லாலும், களிமண் கொண்டும் கட்டப்பட்டிருக்கின்றது. "குடிசைகள் சதுர அமைப்பிலும், நீள் செவ்வக அமைப்பில் அமைகின்றன. குடிசைக்குள் மண் தரை மெழுகப்படாத நிலையிலேயே காணப்படுகிறது. ஈத்தை இலையினால் பின்னப்பட்ட தட்டிகளே கதவுகளாக அமைகின்றன. குடிசைகளுக்குள் தனியறை அமைப்புகள் இல்லை நீண்ட ஒரு கூடம்" (டா. நசீம்தீன், பக்.45). இவ்வாறு கேரளப் பழங்குடி ராஜ மன்னான் இன மக்களின் வீடுகளைப் போன்றே காணிக்காரர்களின் வீடுகளின் அமைப்புகள் அமைந்திருக்கும்.

**காணி இன மக்களின் உணவு முறை**

சங்க கால ஆதி மனிதர்களைப் போலவே காணிக்காரர்கள் வேட்டையாடியும், பின் உணவினை உற்பத்தி செய்தும் வாழ்ந்திருக்கின்றனர். குறிஞ்சி திணைக்குரிய மலையும் மலைச் சார்ந்த இடத்தில் வாழ்கின்ற காணி மக்கள் அந்நிலத்திற்குரிய வேட்டையாடுதலையும், உணவு சேகரித்தலையும் செய்து வாழ்ந்திருக்கின்றனர். "குறிஞ்சி நிலத்தின் உற்பத்தி முறை இயற்கை சார்ந்ததாகவே காணப்படுகிறது. தேன் சேகரித்தல், கிழங்கு அகழ்தல், மலை நெல் பயிரிடல், இயற்கையாகக் கிடைக்கும் காய் கனிகளை சேகரித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றின் மூலம் உணவு தேவையை நிறைவு செய்கின்றனர்". (ஞா.ஸ்டீபன், பக்.51) என்ற செய்தியின் மூலம் தெரியலாகிறது. காணி மக்களும் வேட்டையாடுதல், உணவு உற்பத்தி செய்தல் போன்றவற்றின் மூலமே உணவு தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். மேலும், "காணிக்காரர்களிடம் வேளாண்மையில் இடத்தை தேர்வு செய்தல், வேளாண்மை தொடக்கும் நாள், அறுவடை செய்யும் நாள் ஆகியவற்றை முடிவு செய்யவும் மூதவன் என்று அழைக்கப்படும் பொறுப்பு வழக்கில் இருந்தது" (ஞா.ஸ்டீபன், பக். 7, 8) இவ்வாறு காணி மக்களிடமும் விவசாயம் செழித்தோன்றியதை அறிய முடிகிறது. ஆனால் இத்தகைய உணவு உற்பத்தி முறை ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப மாறுபடுபவையாகும். "ஒரு நாட்டின் உணவு பழக்க வழக்கமானது அந்நாட்டின் மண் வளம், பருவநிலை மாற்றம், கலாச்சாரம், தொழில்கள், பயிரிடப்படும் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை பொறுத்து அமைகிறது. இவ்வுணவு முறை இனக் குழுவுக்கு குழு மாறுபடும்". (ஜோ.கிளம்மி ஜெனி பிரியா, பக்.18). என்னும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குடும்ப அமைப்பு**

காணி மக்களிடம் குடும்ப அமைப்பு என்பது ஒரு முக்கியமான அங்கமாக உள்ளது. இது எல்லா காலகட்டத்திலும் அடிப்படையான ஒன்றாகத் திகழ்கிறது. மேலும், காணி இன மக்கள் இரத்த உறவுகளை தான் குடும்பம் என்று கூறுகின்றனர். "காணி குடும்பங்களை இல்லம் என்று அழைக்கப்படுகின்றனர். இது இரு பிரிவுகளை உடையது. தந்தை வழியில் அமைந்தவை அண்ணன் தம்பி இல்லம் எனவும், தாய் வழியில் அமைந்தவை மச்சம்பி இல்லம் எனவும் அழைத்தனர்." (சொர்ணபபிலா, பக்.198) இவ்வாறு காணி மக்களிடம் இல்லம் என்ற குடும்ப அமைப்பு காணப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**அண்ணன் தம்பி இல்லம்**

தந்தை வழி குடும்பத்து ஆண்களை அண்ணன் தம்பி இல்லம் எனக் கூறுகின்றனர் இதை ஐந்து பிரிவுகளாக பிரிக்கின்றனர். **1. கையில்லம், 2. பெருமில்லம், 3. வேயில்லம், 4. மாங்கோட்டில்லம், 5. மூங்கோட்டில்லம்** என்று அழைக்கின்றனர்.

**கையில்லம்**

காணிக்காரர்கள் மூட்டுக் காணியின் தலைமையில் வேட்டையாடிய மானை பங்கிட்டு கொடுக்கும் போது கைப்பகுதியை எடுத்தவன் கையில்லம் என்று கூறுகின்றனர்.

**பெருமில்லம்**

மான் இறைச்சியை கட்டி எடுத்துச் சென்ற குடும்பத்தினை பெருமில்லம் என்றனர்.

**வேயில்லம்**

மான் இறைச்சியை பங்கிடும்போது வேலியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தவன் பின்பு இறைச்சியை எடுத்து சென்றானாம் அதனால் வேயில்லம் என்றனர்.

**மாங்கோட்டில்லம்**

மானின் ஈரலையும், குடலையும் எடுத்தவன் இல்லம் மாங்கோட்டில்லம் என்கின்றனர். மாங்கோட்டில்லம் என பெயர் வர காரணம் காணியின மக்கள் பேச்சு வழக்கில் மானின் ஈரலை 'மாங்காய்' என்று கூறுவதால் இப்பெயர் ஆனது.

**மூங்கோட்டில்லம்**

ஆந்தை காப்பாற்றியதாக கூறப்படும் குடும்பத்தின் வழி வந்தவர்கள் மூங்கோட்டு இல்லத்தார் என்று அழைத்தனர். ஆந்தைக்கு காணியின மக்கள் மூங்கை என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளனர் இதனால் இப்பெயர் பெற்றது.

**மச்சம்பியில்லம்**

தாய் வழி வந்த இல்லத்தை மச்சம்பியில்லம் என்று அழைக்கின்றனர். இதிலும் ஐந்து பிரிவுகள் உள்ளன. அவை **1. மூட்டில்லம்**, **2. பெருமளத்து இல்லம்**, **3. குறமில்லம்**, **4. தலமில்லம்**, **5.விளநாட்டு இல்லம்** ஆகும்.

**மூட்டில்லம்**

மான் இறைச்சியின் மூலப்பகுதியை எடுத்தவன் குடும்பத்தை மூட்டில்லம் என்று அழைக்கின்றனர்.

**பெருமளத்து இல்லம்**

துன்பம் இழைத்து வந்த அண்ணன், தங்கையை ஊரார் விரட்ட அதற்காக உதவிக் கேட்டு மலைப்பாம்பிடம் சென்றனர். மலைப்பாம்பு இவர்களுக்கு உதவி செய்து, காப்பாற்றி திருமணம் செய்து வைத்தது. இவர்கள் வழி தோன்றிய இல்லத்தை பெருமளத்து இல்லம் என அழைக்கின்றனர்.

**குறமில்லம்**

மான் இறைச்சியின் குறுக்குப் பகுதியை எடுத்தவன் குறமில்லம் என அழைத்தனர்.

**தனமில்லம்**

மானின் தலையை எடுத்தவன் குடும்பம் தனமில்லம் என அழைக்கப்பட்டது.

**விளநாட்டு இல்லம்**

மானின் இறைச்சியை பங்கிட்டு கொண்டிருக்கும்போது நகைச்சுவை சொன்னவன் குடும்பம் விளநாட்டு இல்லம் என அழைக்கப்படுகிறது. (தகவலாளி- விஜயம்மா, கோருவக்குழி, வயது- 65)

காணியின மக்களின் இல்ல முறை அம்மக்களின் பாரம்பரிய மற்றும் கலாச்சாரத்தினை எடுத்துரைக்கின்றது. விலங்குகளை வேட்டையாடி உண்ணத் தொடங்கிய பழங்குடிகள் அதனை வைத்து ஒரு குடும்ப பாரம்பரியத்தை கொண்டு வாழ்ந்திருப்பது பிரமிக்க வைக்கிறது.

**காணிக்காரர்களிடம் காணப்படும் பதவிகள்**

பழங்குடி காணிக்காரர்களில் முக்கிய பதவிகளை மூட்டுக் காணி, விளிக்காணி, பிலாத்தி என்ற மூவரும் வகிக்கின்றனர்.காணிச் சமூகத்தினரிடையே நிகழும் சுப காரியங்களிலும், பிரச்சனைகளிலும் முக்கிய ஆலோசகர்களாக இம்மூவருமே பொறுப்பு வகிக்கின்றனர்.

**மூட்டுக் காணி**

காணிக்காரர்களின் குழுத் தலைவனாக விளங்குபவர் மூட்டுக் காணி ஆகும். மூட்டுக் காணியின் சொல்லையே காணியின மக்கள் தெய்வச் சொல்லாக கேட்டு, அதன்படி நடக்கின்றனர். எல்லா நன்மைக்கும், தீமைக்கும் மூட்டுக் காணியேத் தலைமை தாங்குகின்றார்.

**விளிக்காணி**

விளிக்காணி காணிச் சமூகத்தினரிடையே நடைபெறுகின்ற எல்லா நிகழ்வுகளையும் காணியின மக்களிடம் தெரியப்படுத்துவதே இவரின் வேலையாகும். மூட்டுக்காணியின் கட்டளையையும், செய்திகளையும் இவரே தெரியப்படுத்துகிறார்.

**பிலாத்தி**

காணிக்காரர்களிடையே பிலாத்தி முக்கிய பங்கு வகிக்கின்றார். இவர் நோய் தீர்க்கும் மருத்துவராகவும், தீராத நோய்களை மந்திரத்தின் மூலமும் சரி செய்கின்றார். மேலும் காணி மக்களின் தெய்வ வழிபாட்டிலும் இவரே பூசை செய்கின்றார். மூட்டுக் காணியின் கட்டளை படியே அனைத்தையும் செய்கிறார்.

**காணிஇன மக்களின் மொழி வரலாறு**

மக்கள் தங்கள் எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்த பயன்படுத்தும் ஒரு கட்டமைக்கப்பட்ட கருவி மொழியாகும். மொழி ஒரு சமூகத்தின் பண்பாடு, வரலாறு, ஒவ்வொரு இனத்தின் அடையாளமாகவே அமைகிறது. "ஒவ்வொரு இனத்தாரின் மொழி அமைப்புகளும் அவர்களது வாழ்க்கை முறை, பாரம்பரிய தொடர்பு ,மொழி உணர்வு, நாகரிகம், உளவியல் முதலான காரணிகளால் வரையறுக்கப்படுகின்றன. சிலவேளைகளில் இனக் கலப்பு ஏற்பட்டு மாற்றம் அடைவதுண்டு." (ஹிலாரி ஹெல்சன், பக். 5, 7) இவ்வாறு ஒரு மொழி ஒவ்வொரு இன மக்களின் கலாச்சார உணர்வுகளை கட்டமைக்கிறது என்பதை அறிய முடிகிறது. மொழியானது ஒரு பொழுதும் அதன் அடிப்படை வடிவத்தில் இருந்து மாறுவதில்லை. இதன் மூலம் கால்டுவெல் போன்ற அறிஞர் "இன மொழிகளை இனம் கண்டு திராவிட மொழிகளை திருந்திய ஆறு திருந்தாதன ஆறு என பன்னிரு வகைப்படுத்துகிறார். இன்னும் பல மொழிகள் பழங்குடிகளின் மொழிகளில் இருந்து வர வாய்ப்பு இருக்கிறது என்று சுட்டி இருக்கின்றார்." (பக். 379, 388) வி.ஐ சுப்பிரமணியம் மற்றும் மதூர். தென்னிந்தியாவில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் பெரும்பாலும் அவர்கள் வாழும் பகுதியில் பேசப்படும் பிற மொழிகளைப் பேசுகின்றனர்.

**காணிக்காரர்களின் பேச்சு வழக்கு**

காணிக்காரர்களின் பேச்சு வழக்கு மலையாள மொழி கலப்புடன் காணப்படுகிறது. இவர்களின் பேச்சில் தமிழும், மலையாளமும் கலந்து காணப்படுகிறது. "மலைகளின் மொழி என்று பொருள்படும் படியான "மலம் பாஷா" என்னும் சொல்லாட்சி மூலம் காணிகள் தங்கள் பேச்சு வழக்கினைக் குறிப்பிடுகின்றனர்". (அ.கா பெருமாள், பக். 83)

காணியின மக்கள் தங்களுக்குள் செய்தியை பகிரவும், உணர்வுகளை வெளிப்படுத்தும் பாலமாக மலம்பாஷா என்ற பேச்சு வழக்கில் உள்ளது. "காணிக்காரர்களின் பேச்சு வழக்கு மலையாள மொழிக் கூறுகளை அதிக அளவில் கொண்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு மலையாளம் மொழியின் கிளை மொழி என அறுதியிட முடியாது. சில சொற்களில் ங், ஞ் ஆகிய ஒலிகளை இவர்களின் பேச்சு வழக்கு கொண்டுள்ளது." (பக்.19) என்ற கருத்தை தமிழக பழங்குடியினரின் நாட்டுப்புறப் பாடல்கள் என்ற நூலில் முனைவர் வே. சிதம்பரநாதபிள்ளை குறிப்பிட்டதன் மூலம் அறிய முடிகிறது. மேலும், இவ்வின மக்களின் மொழி கலப்பிற்கு காரணம் கேரள மலை பகுதிகளிலிருந்து குடிப்பெயர்ந்து தமிழ்நாட்டில் உள்ள மலைப்பகுதிகளில் குடியேறிய காணிக்காரர்கள் மலையாளமும், தமிழும் கலந்து பேசுகின்றனர். உதாரணமாக., "தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காணி மக்களின் பேச்சு வழக்கு தமிழின் கிளை மொழி என்றும், கன்னியாகுமரி மாவட்ட காணி மக்களின் பேச்சு வழக்கு படிப்படியாக தமிழின் கிளை மொழியாக மாறிக்கொண்டிருக்கிறது என்றும் கூறுகின்றனர்." (பக்.19) என்ற கருத்தினை வே.சிதம்பரநாத பிள்ளை குறிப்பிட்டதன் மூலம் அறிந்து கொள்ளலாம். மேற்கூறிய கருத்தின் படி, குமரி மாவட்டக் காணிக்காரர்களுக்கும் திருநெல்வேலி மாவட்ட காணி இன மக்களுக்குமான மொழி வேற்றுமையை உணர முடிகிறது. காணியின மக்களின் மொழி கலப்பினை அவர்களின் பேச்சிலும் பாட்டிலும் தெரியலாகிறது. உதாரணமாக.,

**ஏ! கொச்சு தும்பி**
**நின்ன சாரீரத்தில சாயமடிச்சது ஆரான**
**சோதிச்சு சண்டைக்கு வாரேன் நின்ற ரீங்கார சங்கீதம் கேட்டு**
**நான் சொக்கிப் போனெ**
**என்னோடு வந்தக்க**
**உனக்கு களிக்க கழச்சி தராம் (தகவலாளி -பார்வதி)**

மேற்கண்ட பாடலில் 'நின்ற சாரீரத்தில்' என்பது மலையாளம் ஆகும். அதற்கான தமிழ் விளக்கம் 'உன் உடம்பில்' என்பதாகும். 'சோதிச்சு-கேட்டு', 'நின்ற-உன்னுடைய', 'களிக்க-விளையாட' போன்ற மலையாள கலப்பு காணப்படுகிறது.

**காணிக்காரர்களின் உறவு முறை தொடர்பான சொற்கள்**

காணியின மக்கள் உறவுகளை அழைக்கும் சொற்கள் பெரும்பாலும் மலையாளம் கலந்து காணப்படுகிறது. இது குறிப்பாக குமரி மாவட்ட காணி மக்களிடம் காணப்படும் பேச்சு வழக்காக உள்ளது."அச்சன் - அப்பா, அச்சி - சகோதரி (அக்கா), அனியன் - தம்பி, அம்மாச்சன் - தாய் மாமன், அம்மாவி- அத்தை, உழி பொண்ணு - 12 வயதிலிருந்து 18 வயது உள்ள பெண்ணை அழைப்பது, காரணவர் - குடும்பத்தின் மூத்தவர்களை அழைப்பது, கொச்சிசன் - சித்தப்பா, கொச்சம்மா - சித்தி, சேட்டன் - அண்ணன், முத்தி - பாட்டி, முத்தன் - தாத்தா, நாத்து - அண்ணன் மனைவி, (தகவலாளி - லதிகா, கோருவக்குழி) இவ்வாறு உறவுப் பெயர்கள் மலையாள மொழி கலப்புடன் காணி மக்களால் பேசப்படுகிறது. மேலும் அன்றாட வாழ்வில் இவர்கள் பேசுகின்ற மொழிகளில் மலையாள மொழியின் கலப்பு அதிகமாக கலந்திருப்பதை காண முடிகிறது. ஆனால் கல்வி அறிவு வளர வளர வெளிச்சமூகத்தினரிடம் பேசும் போதும் தமிழிலேயே பேசுகின்றனர் என்பதையும் அறிய முடிகிறது.

**தெய்வம் பற்றிய வாய்மொழி கதைகள்**

பேச்சிப்பாறை காணிக்காரர்களின் வழிபாட்டு தெய்வங்களில் பேச்சியம்மன் முக்கியமான குலதெய்வம் ஆகும். இந்த அம்மன் பற்றிய வாய்மொழி வரலாறு ஒன்று கூறப்படுகிறது. அதாவது, "சிவனுக்கும், பார்வதிக்கும் திருமணம் நடைபெற்ற போது வடதிசை தாழ்ந்தும் தென்திசை உயர்ந்தும் காணப்பட்டது. அகத்தியர் பூமியை சமநிலைப்படுத்த தென்திசை நோக்கி வந்ததாகவும் அப்போது பேச்சியம்மன் தேவி சுயம்புவாக காட்சி

அளித்தார்" என்று வாய்மொழி கதை ஒன்று உலாவுகிறது. (தகவலாளி- ஐயப்பன் காணி ஆண்டிப்பொற்றை)

**திருமண சடங்குகள் முறை**

திருமணம் ஒவ்வொரு இன மக்களிடமும் வேறுபட்டு காணப்படுகிறது. காணியின மக்களின் திருமண சடங்குகளும் முற்றிலும் வேறுபாடு உடையது. பழங்காலத்தில் திருமணத்தை "உருவு மாறுதல்" என்று அழைத்திருக்கின்றனர். நாள், நேரம், கிழமை அக்காலத்தில் காணியின மக்கள் திருமணத்திற்காக கணக்கிடப்படவில்லை. "1960 க்கு முன் நடந்த திருமணங்களில் மணப்பெண் இடுப்பில் வேட்டியை கட்டிக்கொண்டு மேலாடை அணியாமல், தலையில் துண்டு போட்டும், மணமகன் இடையாடை (கோவணம்) உடுத்தியும், கதர் துண்டை தோளில் போட்டும் திருமணத்திற்கு தயாராகுவார்." (தகவலாளி: குமார் காணி தச்சமலை) இவ்வாறு திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு மூட்டுக் காணியின் தலைமையில் நடைபெறுகிறது. சான்றாக "மூட்டுக் காணி திருமணத்தை நடத்தி வைக்கிறார் பெண்ணின் கழுத்தில் தாலியினை கட்டிய பிறகு விருந்து நடைபெறும்." (வேசிதம்பரநாத பிள்ளை, பக். 15)

**முடிவுரை**

ஆதிப் பழங்குடி காணியின மக்கள் வாழ்வியல் மலைச் சார்ந்து காணப்படுகிறது. நாகரிகத்தில் பின்தங்கிய இம்மக்கள் சங்ககால மக்களை பின்பற்றி வாழ்ந்துள்ளனர். காணியின மக்கள் வாழும் சூழல், பேசும் மொழி, புராண கதைகள் போன்றவற்றில் வேறுபாடுகள் இருப்பினும் பழக்க வழக்கங்கள் மற்றும் தொழில்களில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. மலை குகைகளிலும், காடுகளிலும், மலைச் சரிவுகளிலும் வன விலங்குகளிடமிருந்து தங்களை பாதுகாத்து வாழும் தன்மை படைத்தவர்கள். வாழும் சூழலுக்கு தகுந்த குடும்ப அமைப்பை உருவாக்கி வாழுகின்றனர். இவ்வின மக்களின் தனித்துவமான கலாச்சாரமும், பண்பாடும் பேணிபாதுகாக்கப்பட வேண்டும்.

**குறிப்புகள்**

[1] அகத்தியலிங்கம், ச. *தமிழக பழங்குடிகள்.* (ப .20).
[2] ஐய்யப்பன் காணி .தகவலாளி .ஆண்டிப்பொற்றை .வயது 58.
[3] கிளம்மி ஜெனி பிரியா, ஜோ. *மலரும் சருகும் நாவலில் நாடார் இன மக்களின் இன வரைவியல்.* ஆய்வு கட்டுரை) .ப .18).
[4] குமார் காணி .தகவலாளி .தச்சமலை .வயது 45.
[5] கொச்சுமணி .பாடல் தந்தவர். *தமிழக காணிக்காரர்களின் நாட்டுப்புற பாடல்கள்.*
[6] சிதம்பரநாத பிள்ளை, வே. *காணிக்காரர்களின் மொழி மேம்பாட்டு சிந்தனைகள்.* ஆய்வு கட்டுரை.
[7] ---. *தமிழக காணிக்கார பழங்குடியினரின் நாட்டுப்புற பாடல்கள்.* தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
[8] சுப்பிரமணியம், V. I., மற்றும் மதூர். *நேஷனல் செமினார் ட்ரைபல் எடுகேஷன் கேரளா.*
[9] செலின், சா. *காணி மக்களின் வழக்குச் சொற்கள்.* ஆய்வேடு .தமிழில் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, ஏப்ரல் 2009. (ப .2).
[10] சொர்ணபபிலா, இரா. *குறிஞ்சி நில பண்பாடும் மாற்றங்களும்.* ஆய்வேடு.
[11] தர்மராஜ், யோ. *காணிக்கார பழங்குடியினரின் வழக்காற்றியல்.* தொகுதி 1.
[12] நசீம்தீன், பீ. *இடுக்கி மாவட்ட பழங்குடி மக்களின் வழக்காற்றியல்.* (ப .9).
[13] பக்தவத்சலபாரதி. *இலக்கிய மானுடவியல்.* அடையாளம் பதிப்பகம், 2014.
[14] ---. *தமிழக பழங்குடிகள்.* (ப .48).
[15] பார்வதி .தகவலாளி .தச்சமலை .வயது 65.
[16] பெருமாள், அ .கா. *குமரி நாட்டுப்புறவியல்.* தன்னனானே பதிப்பகம்.

[17] மணிமாறன், K. *பழங்குடி மக்களின் வாழ்வியல் கன்னியாகுமரி மாவட்டம்.* இளம் முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழ் கலை ஆய்வகம்.
[18] ராபர்ட் ஃபயர்ஷெட். *தி சோசியல் ஆர்டர்.* தொகுதி 3, 1970.
[19] லதிகா .தகவலாளி .கோருவக்குழி .வயது 40.
[20] விஜயம்மா .தகவலாளி .கோருவக்குழி .வயது 60.
[21] வெரியர் எல்வின். *எல்வின் கண்ட பழங்குடிகள்.* (ப .120).
[22] வையாபுரிபுள்ளை, எஸ். *சங்க இலக்கியம்.* பாரிநிலயம், சென்னை.
[23] ஸ்டீபன், ஞா. *இலக்கிய இன வரைவியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[24] ஹிலாரி ஹெல்சன். *இயர்லி பிரிட்டிஷ் ஆந்திரபோலஜி.* தவிஜோத் பதிப்பகம், லண்டன்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.